# 04 நீங்களே சொல்லுங்கள்



சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே.

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென**
**நின்ற இயற்கைகளே! - உம்மைச்**
**சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி**
**லாளர் தடக்கைகளே!**

**தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்**
**சாட்சியும் நீயன்றோ? - பசி**
**தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்**
**செல்வர்கள் நீதி நன்றோ?**

**எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க**
**ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்**
**புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்**
**புதரினில் தூங்கிடுமோ?**

**கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்**
**கெஞ்சும்உத் தேசமில்லை - சொந்த**
**வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த**
**வார்த்தைக்கு மோசமில்லை.**

**- பாரதிதாசன்-**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| தடாகம் | - | குளம் |
| ஞாலம் | - | உலகம் |
| கீர்த்தி | - | புகழ் |
| சாரும் | - | சேரும் |
| தடக்கை | - | வலிமையான கை |
| ஏறு | - | ஆண் சிங்கம் |
| கிலி | - | பயம் |
| தாரணி | - | பூமி |

## கிரகித்தற் பயிற்சி

1. இப்பாடலில் தொழிலாளர்கள் செய்த சேவைகள் என கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்.
2. “ ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட அந்தியெல்லாம் உழைத்தார்” இவ்வரிகளில் கையாளப்பட்டுள்ள அணியினை விளக்குக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

3. எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே - சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?
என்ற வரிகள் உணர்த்தும் கருத்தினைத் தெளிவுபடுத்துக.

4. தொழிலாளர் கிளர்ச்சி கொள்வார் என்ற கருத்து இக்கவிதையில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

5. இக்கவிதை மூலம் கவிஞர் வலியுறுத்த விரும்பும் கருத்து யாது?

6. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்தெழுதுக.
(அ). நன்னிலம்
(ஆ) தந்ததெவை
(இ) வலிவுடையார்
(ஈ) தடக்கைகள்
(உ) புசிப்பளித்தே

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. தொழிலாளர்கள் பற்றிய வேறு கவிதைகளைத் சேகரித்து கவிதைத் தொகுப்பொன்றைத் தயாரியுங்கள்.

2. பாரதிதாசன் பற்றிய விபரக்கோவை ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள்

## இலக்கணம்

### சுட்டெழுத்து

**அ, இ, உ** என்னும் மூன்று உயிர் எழுத்துக்களும் சொல்லின் முதலில் நின்று ஒன்றைச் சுட்டிக்காட்டுகையில் அவை சுட்டெழுத்து எனப்படும்.
**அ, இ, உ** ஆகிய சுட்டெழுத்துக்கள் பெயர்ச் சொல்லுக்கு முன் சுட்டுப் பொருளை உணர்த்தி நிற்கும்.

¤ இ - பேசுபவருக்கு அருகில் உள்ளதைக் குறிக்கும்.

**உதாரணம்:-**
இந்த மரம்
இந்தப் பேனை

¤ உ - கேட்பவரின் அருகில் உள்ளதைக் குறிக்கும்.

**உதாரணம்:-**
உந்த மரம்
உந்தப்பேனை

¤ அ - இருவருக்கும் சேய்மையில் உள்ளதைக் குறிக்கும்.

**உதாரணம்:-**

அந்த மரம்
அந்தப் பேனை

தற்காலத்தில் (உ) என்னும் சுட்டெழுத்து அவ்வளவாகப் பயன்பாட்டில் இல்லை. எனினும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் 'உ' சுட்டெழுத்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

**சுட்டெழுத்துக்கள் இருவகைப்படும்**

**சுட்டெழுத்துக்கள்**

| அகச்சுட்டு | புறச்சுட்டு |
|---|---|
| அது, இது, உது | அப்பையன், இப்பெண், உவ்வீடு |
| **(சொல்லின் அகத்தே நின்று சுட்டுப் பொருளை உணர்த்துவது)** | **(சொற்களுக்கு வெளியே நின்று சுட்டுப் பொருளை உணர்த்துவது)** |

அ, இ என்னும் சுட்டெழுத்துக்கள் அந்த, இந்த எனத் திரிந்து வருவதுமுண்டு
உதாரணம் -:
அந்த மனிதன்
இந்த மனிதன்

## வினாவெழுத்து

சொற்களை வினாவாக மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் வினாவெழுத்துக்கள் எனப்படும். அவையாவன

**உதாரணம் :-** எ, யா, ஆ, ஓ, ஏ

எ, யா என்னும் மூன்று எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்து வினாப் பொருளைப் பெறும்.

**உதாரணம் -**

**எம்மனிதன் ? எவன்?**
**யாங்ஙனம்? யார்? யாது? ஏன்? ஏது?**

ஆ, ஓ என்னும் எழுத்துக்கள் இரண்டும் மொழிக்கு இறுதியில் நின்று வினாப் பொருளை உணர்த்தும்.

**உதாரணம் :-**

**கவிஞனா?**
**கவிஞனோ?**

ஏ என்னும் எழுத்து மொழிக்கு முன்னும் பின்னும் நின்று வினாப் பொருளை உணர்த்தும்.

**உதாரணம் :-**

**ஏன்?**
**சாப்பிட்டானே?**

**மாத்திரை**

ஓர் எழுத்தை உச்சரிக்க எடுக்கும் கால அளவு மாத்திரை எனப்படும். ஒரு மாத்திரை அளவு என்பது ஒரு கண்ணிமைப் பொழுதாகவோ கைந்நொடிப் பொழுதாகவோ அமையும்.

- ♦ மெய் எழுத்து - அரைமாத்திரை
- ♦ உயிர்க்குறில் - ஒருமாத்திரை
- ♦ உயிர்நெடில் - இரு மாத்திரை
- ♦ ஆய்தம் - அரை மாத்திரை
- ♦ உயிர் மெய் - ஏறிய உயிரின் மாத்திரை அளவாகும்

**போலி**

ஒரு சொல்லில் ஓரெழுத்துக்குப் பதிலாக மற்றோர் எழுத்து நிற்பினும் பொருள் வேறுபடாமல் ஒத்திருந்தால், அவ்வண்ணம் நிற்கும் எழுத்து போலி எனப்படும். **போலி என்பது, போல நிற்றல் எனப் பொருள்படும்.**
போலி மூன்று வகைப்படும்.

**போலி**

| **முதற்போலி** | | **இடைப்போலி** | | **கடைப்போலி** | |
|---|---|---|---|---|---|
| **இயல்பு** | **போலி** | **இயல்பு** | **போலி** | **இயல்பு** | **போலி** |
| ஔவை | அவ்வை | அமைச்சு | அமச்சு | முகம் | முகன் |
| நௌவி | நவ்வி | இலஞ்சி | இலைஞ்சி | குடல் | குடர் |
| மயல் | மையல் | அரசு | அரைசு | சாம்பல் | சாம்பர் |
| | | ஐந்நூறு | ஐஞ் □று | பந்தல் | பந்தர் |
| | | நேயம் | நேசம் | | |

## பயிற்சி

(i) பின்வருவனவற்றுள் சுட்டெழுத்துக்களால் அமைந்த சொற்களை வேறாக்கி அவற்றினை வகைப்படுத்துங்கள்.

அன்பன், உவன், இளைஞன், உம்பர், எங்கே, இங்கே, அவர், அக்காலம், இந்த வார்த்தை, எறும்புகள்

(ii) பின்வரும் போலி எழுத்துக்களை முதற்போலி, கடைப்போலி, இடைப்போலி என பாகுப்படுத்தி அவற்றின் இயல்பு நிலையையும் எழுதுங்கள்.

மயல், சாம்பர், குடர், அமச்சு, நேசம் , அவ்வை

(iii) வினா எழுத்துக்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக. அச்சொற்களின் மாத்திரை அளவினையும் குறிப்பிடுங்கள்.

## மொழி வளம்

**அடைமொழி**

கீழ்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்

(1) தடாகங்களில் **அழகிய** தாமரைப் பூக்கள் பூத்துக் குலுங்கின.

(2) மாணவர்கள் **விரைவாக** ஓடினர்.

தடித்த எழுத்திலுள்ள சொற்களை அவதானியுங்கள் **அழகிய** என்ற சொல் ''தாமரைப்பூக்கள் ' என்ற பெயர்ச்சொல்லை விசேடித்து நிற்கிறது. இத்தகைய சொற்கள் **பெயரடைகள்** எனப்படும்.

**விரைவாக** என்ற சொல் ' ஓடினர் ' என்ற வினைச் சொல்லை விசேடித்து நிற்கிறது. இத்தகைய சொற்கள் **வினையடைகள்** எனப்படும்.

இவ்வாறான அடைமொழிகள் சொல்லுடனும் சொற்றொடருடனும் இணைந்து அவற்றை அழகுபடுத்துகின்றன.

## பயிற்சி

(i) **பின்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளைச் சேர்த்து வாக்கியங்களை நீட்டி எழுதுக.**

1. பாரதிதாசன் பாடல்களைப் பாடியுள்ளார்.
2. தொழிலாளர்கள் உழைத்தனர்.
3. தொழிலாளர்கள் பாதையில் விரைவாகச் சென்றனர்.
5. பாரதிதாசனின் மேடைப் பேச்சைச் செவியுற்ற மக்கள் பலமாகக் கைதட்டினர்.
6. முதலாளிமார் பலர் தொழிலாளர்களை மதித்தனர்.

(ii) ''நீங்களே சொல்லுங்கள்,'' என்ற கவிதையில் வரும் பெயரடைகள் **ஐந்தினை** எழுதுக.

(iii) பின்வரும் சொற்களுக்கு பொருத்தமான அடைமொழிகளைச் சேர்த்து வாக்கியங்கள் எழுதுக.
(நூலகம், மலர்கள், அறிஞர், வாடின, படித்தோம், பாய்ந்தன, சுற்றுகிறது, உள்ளம், இலக்கியங்கள், எழுதினாள்)

## ஆக்கத்திறன்

### மேடைப்பேச்சு

★ **மேடைப்பேச்சினை நிகழ்த்தும் போது கருத்திற்கொள்ள வேண்டியவை**

**(அ) விடயத்தைத் தெரிதல்**

¤ தெரிந்த ஒரு விடயமாக இருத்தல்.
¤ அவ்விடயம் கேட்போருக்கு ஆர்வமூட்டத்தக்கதாகவும் சுவையூட்டத்தக்க தாகவும் நடைமுறையில் பொருத்தப்பாடுடையதாகவும் இருத்தல்

**(ஆ) பேச்சை ஆயத்தம் செய்தல்**

¤ பேச்சுக்கு ஒரு சட்டகம் வரைதல்.
¤ உதாரணங்களை இணைத்துக் கொள்ளல்.
¤ பேச்சைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துதல்.
¤ கூட்டத்தில் பேசுவதற்கு முன், பன்முறை பேசிப்பழகுதல்.
¤ சட்டகக் குறிப்புகளுக்கேற்ப கருத்துக்களை மனதிலே ஒழுங்கு செய்து பேசுதல்.

### (இ) பேசுதல்

- அவையோரைக் கவரும் வகையில் பேசத் தொடங்குதல் வேண்டும்.
- தெளிவாகவும் உறுதியாகவும் பேசுதல்.
- அவையோரைப் பார்த்துப் பேசுதல்.
- இடையிடையே அவையோரை விளித்துப் பேசுதல்.
- இடையிடையே வினாக்களை வினவிச் சபையோரின் கவனத்தை ஈர்த்துப் பேசுதல்.
- உமது விடயத்தில் ( பேச்சுத்தலைப்பு) நீர் ஊக்கம் கொண்டிருப்பதைக் காட்டுதல்.
- மனனஞ் செய்ததை ஒப்புவிப்பது போல் பேசாது தெளிவாகப் பேசுதல், தொனி வேறுபாடு, உணர்ச்சி வெளிப்பாடு என்பன புலப்படும் வகையில் உச்சரிப்புத் தெளிவுடன் பேசுதல்

## செயற்பாடு

- பாரதிதாசன் பற்றிய தகவல்களைத் திரட்டுக.
- பாரதிதாசன் என்ற தலைப்பில் மேடைப்பேச்சு நிகழ்த்துவதற்கு ஒரு சட்டகம் வரைக.
- தேவையான மேற்கோள்களைக் குறித்துக் கொள்க.
- மாணவர் மன்றத்தில் பேசுவதற்காக ஐந்து நிமிடம் கொண்ட மேடைப் பேச்சு ஒன்றை எழுதுக.
- எழுதிய பேச்சை ஏனையோர் முன் பேசிக்காட்டுக.